தினமணி
www.dinamani.com

# மரப்பெருக்கு நிறுவனத்தில் சர்வதேச காடுகள் தின விழா



**கோவையில் உள்ள வன மரபியல், மரப்பெருக்கு நிறுவனத்தில் செவ்வாய்க்கிழமை நடைபெற்ற சர்வதேச காடுகள் தின விழாவில் மரக்கன்று நடுகிறார் நிறுவனத்தின் இயக்குநர் சி.குன்னி கண்ணன்.**

**கோவை, மார்ச் 21:** கோவையில் உள்ள வன மரபியல், மரப்பெருக்கு நிறுவனத்தில் சர்வதேச காடுகள் தின விழா செவ்வாய்க்கிழமை நடைபெற்றது.

நிறுவனத்தின் சுற்றுச்சூழல் தகவல் பரப்பு மையத்தில் நடைபெற்ற இந்த விழாவை மரப்பெருக்கு நிறுவன இயக்குநர் சி.குன்னி கண்ணன் தொடங்கிவைத்தார். முன்னதாக மரக்கன்று நட்டு வைத்த அவர், மாணவர்களுக்கான விழிப்புணர்வு சுவரொட்டியை வெளியிட்டு மரங்களின் முக்கியத்துவம் குறித்துப் பேசினார்.

முதுநிலை விஞ்ஞானி கண்ணன் சி.எஸ்.வாரியர், சர்வதேச காடுகள் தினத்தின் முக்கியத்துவம், இந்த ஆண்டின் கருப்பொருளான காடு ஆரோக்கியம் குறித்து எடுத்துரைத்தார். இந்தியன் ஆயில் கார்ப்பரேஷன் நிறுவனத்தின் கோவை மண்டல முதுநிலை மேலாளர் சரவணன், நாட்டு மரக்கன்றுகளை நடுவதன் முக்கியத்துவம் குறித்துப் பேசினார். இந்த விழாவில், பல்வேறு மருத்துவ குணங்கள் கொண்ட மரக்கன்றுகள், பழ வகை மரங்கள் மரப்பெருக்கு நிறுவன தாவரவியல் பூங்காவில் நடப்பட்டன. மூத்த திட்ட அலுவலர் எஸ்.விக்னேஸ்வரன் நன்றி கூறினார்.

18. News in Dinamani, Coimbatore, 22.03.2023, Observance of International Day of Forests by ICFRE-IFGTB EIACP.